# உங்களை வெற்றி சிறக்கப் பண்ணுகிறவர்



சகோதரி. பிரேமாடேவிட்

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும், எங்களை கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரிந்தியர் 2:14 கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, சிலுவையில் வெற்றி சிறந்தவராகிய ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். 11-ஆம் வகுப்பு படிக்கும் மாணவனிடம், ஆசிரியர் ABCD சொல்லு என கேட்டவுடன் அவன் சொல்லத் தொடங்கினான். KL அதற்கு மேல் சொல்லத் தெரியவில்லை. அந்தளவுக்கு அவன் படிப்பிலே Weak, எல்லாராலும் 'மக்கு' என்றும் கேலி கிண்டல் செய்யப்பட்டான். Students ஐ High, medium என அவர்கள் எடுக்கும் Mark-ஐ வைத்து Group பிரித்து படிக்க வைப்பார்கள். இவனோ இது எல்லாவற்றிலும் அடிமட்டத்திலிருந்தான். இவன் படித்ததோ ஒரு கான்வென்ட் பள்ளி. பெற்றோர் நல்லாதான் படிக்க வைக்கிறாங்க. டீச்சர் எப்படியாவது பாஸாக்கி விடவேண்டும் என அதிகமா முயற்சி எடுத்தார்கள். படிப்புன்னு நெனச்சாலே அவனுக்கு பயமா இருந்துச்சு. படிப்பு அவனுக்கு ஏறவேயில்லை. அப்பத்தான் அவனுடைய Friend அவனுக்கு ஒரு (துர்) ஆலோசனை சொல்கிறான். படிக்காத எத்தனையோ பேரு முன்னேற்றத்திற்கு வந்திருக்காங்க காமராஜரைப் பாரு. அவர் முதலமைச்சர் ஆனாரே. நீயும் படிக்காமல் முன்னேறலாம். நீ நூறு ரூபாய் உங்க வீட்டில திருடிட்டு வா. எங்க மாமா கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து அடிக்கடி நாமக்கல் போவார் அவருக்கு 20, 30 கொடுத்தேனா அவர் உன்னை கடையில் சேர்த்து விடுவார்.தினமும் 50 ரூபாய் கிடைக்கும். கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வந்துவிடலாம் என்றான். படிப்பிலே தோல்வியான எண்ணங்களோடு இருந்த அவனுக்கு நல்லதாகத் தோன்றியது. இதுவரை திருட்டுப் பழக்கம் இவனுக்கு இருந்ததில்லை.ஆனால் அன்று அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் ATM கார்டு மூலம் 100 ரூபாய் எடுத்து வீட்டை விட்டு ஓடி போகிற முடிவுக்கு வந்து விட்டான். நாளைக்கு காலையில் ஓடிப்போகணும்-னு Plan பண்ணியிருக்கும்போது ஒரு சகோதரன் இவனை சூளைமேட்டிலே ஒரு Youth Meeting-நல்லா இருக்கும் வந்து Attend பண்ண முடியுமா என்றார்கள். இதுவரைக்கும் எந்த கிறிஸ்தவக் கூட்டங்களுக்கும் போயிராத அந்த மாணவன் நாளைக்கு நம்ம ஓடிப்போகப் போறோம் சரி போயிட்டு வருவோம் என நினைத்தான். அங்கே போக வேண்டும் என்ற உணர்வு உந்தித் தள்ளினது. Prayer முடிந்தவுடன் அங்குவந்த தேவஊழியர் வாலிபர்கள் தலையில் கை வைத்து ஜெபித்தார். இவன் தலையில் கை வைத்து ஜெபித்தபோது கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய் ஆண்டவர் உன்னை Double Degree படிக்க வைக்கப் போகிறார். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்றார். இந்த வார்த்தைகள் அவனை உற்சாகப்படுத்தினது அதோடு ஓடிப்போகிறதை விட்டுட்டு மறுநாள் School-க்குப் போனான்.அதைத் தொடர்ந்து சபைக்குப் போக ஆரம்பித்தான்.

ஆலயத்திலுள்ள சின்ன சின்ன வேலைகளை ஆர்வமாய் செய்து வந்தான். அப்பொழுது Church-க்கு இங்கிலாந்தில் இருந்து வந்த ஒரு ஊழியக்காரம்மா இந்த தம்பியை பார்த்து கர்த்தர் ஊழியத்திற்கு உன்னை அழைக்கிறார் என்றார்கள். பின்பு, அந்த ஊழியக்காரம்மா இங்கிலாந்து சென்று 6 மாதம் கழித்து மீண்டும் லக்ஷ்மிகாந்த் படிக்கும் பள்ளிக்கு Special Guest ஆக அழைக்கப்பட்டிருந்தார்கள். ஒரே Uniform-ல 5000 பேர், ஒரே ஆடிட்டோரியத்தில் அமர்ந்திருக்கும் போது அவர்கள் சில வார்த்தைகளை பேசி ஜெபித்தபோது அந்த அம்மா பில்லருக்கு கீழேயிருக்கிற தம்பியைக் கூப்பிடுங்கனு சொன்னாங்க. இவன் ஓடினான். அந்த அம்மா இவனை Total -la மறந்து விட்டார்கள். அவனை நோக்கி இவன் இயேசப்பாவுக்கு பிடிச்ச பையன். அவருடைய ஊழியத்தை இவன் செய்வான் என்று எல்லார் முன்பாக அந்த அம்மா சொன்னார்கள். ABCD-யே இவனுக்கு தெரியாது மக்கு. ஒன்றுக்கும் லாயக்கு இல்லாதவன் என்று பேசப்பட்ட இடத்திலே Physics-176 மார்க் எடுத்து XIIth I Grade-ல் பாஸ் ஆனான். எல்லாரும் எப்படி இவன் மார்க் வாங்கினான் என்று ஆச்சரியப்படும்படி ஆண்டவர் செய்தார். இந்தியாவிலேயே மிகச் சிறந்த கல்லூரியில் இன்ஜினியரிங் படித்து, மேற்படிப்பு இங்கிலாந்தில் முடித்து இன்றைக்கு மும்பையில் நத்தானியேல் லக்ஷ்மிகாந்த் ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். இந்த வாலிபனைப் போல எப்பொழுதும், எல்லா இடங்களிலேயும் கிறிஸ்துவுக்குள் நீங்களும் வெற்றி சிறப்பீர்களாக.